# செங்கல்பட்டு நகராட்சி

## சிறப்புக் கூட்டம்

**2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 ராமபாளையம், வார்டு எண்.33 அண்ணாநகர், வார்டு எண்.30 செங்கைராயல் சிட்டி, வார்டு எண்.31 அழகேசன் நகர், வார்டு எண்.27 குண்டூர் ஆகிய இடங்களில் தமிழ்நாடு நகர்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம் 2019–20 ன் கீழ் ரூ.100.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1. தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி – ரூ.30.00
2. மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு / மானிய நிதி / நில அபிவிருத்திக் கட்டண நிதி – ரூ.50.00
3. நகராட்சி பொது நிதி பங்கு – ரூ.20.00

------

ரூ.100.00

-------

மேற்குறிப்பிட்டுள்ள நிதி ஒதுக்கீடு செலவிடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 861 நாள் 03.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்/ ஆணையர்
செங்கல்பட்டு நகராட்சி

# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரண கூட்டம்

**2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

---

**பொருள்.1**

செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் அவர்களின் 8/2019 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 862 நாள் 30.09.2019**

ஆணையரின் நாட்குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

**பொருள்.2**

செங்கல்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களின் 8/2019 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 863 நாள் 30.09.2019**

பொறியாளரின் நாட்குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

**பொருள்.3**

செங்கல்பட்டு நகராட்சியில் 1 மின் கம்பியாளர் (Wire man) மற்றும் 1 மின்கம்பி உதவியாளர் (Wire man) ஆகியோர் மட்டும் தற்பொழுது பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் மூலம் வார்டு எண் 1 முதல் 6 வரையுள்ள தெருவிளக்குகள் நகராட்சி பணியாளர்களை கொண்டு பராமரிக்கவும். மேலும், இந்நகராட்சியின் 7 முதல் 33 வரையுள்ள வார்டுகளில் உள்ள தெரு விளக்குகளை பராமரிப்பு செய்ய போதுமான பணியாளர்கள் இல்லாததால் 01.12.2019 முதல் 30.11.2020 வரையில் தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | 40 வாட்ஸ் குழல் விளக்கு | = 2995 எண்ணிக்கை |
| 2. | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு | = 448 எண்ணிக்கை |
| 3. | 85 வாட்ஸ் சி.எப்.எஸ் விளக்கு | = 334 எண்ணிக்கை |
| 4. | 90 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | = 174 எண்ணிக்கை |
| 5. | 400 வாட்ஸ் உயர்கோபுர விளக்கு (3x6) | = 18 எண்ணிக்கை |
| | மொத்தம் | = 3969 எண்ணிக்கை |

----

மேற்கண்ட 7 முதல் 33 வரையுள்ள வார்டுகள் மொத்தம் 27 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள் தனியார் மூலம் பராமரிக்க மதிப்பீட்டுகள் கூடிய பிரேரனை தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்காகும் ஓராண்டுக்கு (2019–2020) பராமரிப்பு செலவினம் ரூ.61.50/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 2020–2021 ஆண்டிற்கு (19–20) ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுடன் 5% கூடுதலாக சேர்ந்து ரூ.64.58/– இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளவும் மற்றும் 21–22 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுடன் 5% கூடுதலாக சேர்ந்து ரூ.67.81/– இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.0446/இ1/2018)

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 865 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.4**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட 7 முதல் 33 வார்டுகள் வரை 27 வார்டுகளுக்கு தெருவிளக்குகளை பராமரிப்பு பணியினை “M/S சன்ரைஸ் சோலார் சிஸ்டம்” காஞ்சிபுரம் என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்கண்ட பணிக்கு ந.ம.தீர்மான எண்.70 நாள்.27.03.2017–ல் பணி நீட்டிப்பு அனுமதி பெறப்பட்டுள்ளது. இதற்குண்டான செலவுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு ந.ம.தீர்மான எண்.526 நாள்.31.07.2018–ல் ஒப்புதல் பெறப்பட்டு மேலும் இப்பணிக்கான கூடுதல் செலவுத் தொகை ரூ.26.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு மற்றும் செலவுத் தொகைக்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண். 864 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.5**

செங்கல்பட்டு நகராட்சியில் 2011–ன் மக்கள் தொகை கணக்கின் படி 64.136 எண்ணிக்கையும், மொத்த பரப்பளவு 6.09 சதுர கிலோ மீட்டர் ஆகும். இவற்றில் மொத்தம் 33 வார்டுகள் உள்ளன.

இந்நகராட்சிக்கு தோற்றுவிக்கப்பட்ட 7 துப்புரவு மேற்பார்வையாளர்கள் பணியிடங்கள் உள்ளன, அவற்றில் தற்போது 5 பணியிடங்கள் காலியாக உள்ளது. மேற்படி பொருள் குறித்து நகராட்சி நிர்வாக ஆனையர் சென்னை–28 அவர்களுக்கு காலியிடங்களாக உள்ள பணியிடங்களில் தகுதி வாய்ந்த பணியாளர்களிடம் முதண்மை முதுநிலைப்பட்டியல் கொண்டு (seniovity) பட்டியல் பெற்று பூர்த்தி செய்ய உரிய உத்திரவு வழங்குமாறு நகராட்சி மூலம் பிரேரேணை கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் தற்போது துப்புரவு மேற்பார்வையாளர்கள் இரண்டு நபர்களே உள்ள நிலையில் திடக்கழிவு மேலாண்மையில் தொய்வு ஏற்படுவதாலும், வடகிழக்கு பருவ மழையை எதிர் வரும் காலங்களில் எதிர்கொள்ள வேண்டி உள்ளதாலும், கால்வாய்களை தூர்வாரும் பணிகளையும், Mass cleaning மற்றும் காலிமனைகளை சுத்தம் செய்யவும் வேண்டியுள்ளதால் நகர் நல அலுவலர் குறிப்பின் படியும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து அனுமதி வரும் வரை கீழ்க்கண்ட முதுநிலை மூப்பு பட்டியலில் உள்ள மூன்று பேரை 1920 ம் ஆண்டு நகராட்சிகள் சட்டம் பிரிவு 8 (a) (1)–ன் கீழ் துப்புரவு மேற்பார்வையாளர்களாக பணிபுரிய – முற்றிலும் தற்காலிகமாகவும், பின்னர் பதவி உயர்வில் முன்னுரிமையோ அல்லது தற்போது வேறு சலுகைகளோ பெற முடியாதவாறும் இத்தற்காலிக பதவினை ரத்து செய்வதற்கு ஆணையருக்கு முழு அதிகாரம் உள்ளது என்ற நிபந்தனையுடன் கீழ்கண்ட பணியாளர்களின் பதிவு மூப்பு பட்டியலில் உள்ள முதல் மூன்று பணியாளர்களை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் இருந்து உரிய உத்தரவு வரும் வரை துப்புர மேற்பார்வையாளர்களாக தற்காலிக மாக பணியில் அமர்த்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி | D.O.B | D.O Joining | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|---|
| 1 | க.மாரியப்பன் | துப்புரவு பணியாளர் | 22.06.1964 | 20.01.1997 | 8–ம் வகுப்பு தேர்ச்சி |
| 2 | K.அன்புராஜ் | இரவு காவலர் | 25.12.1963 | 26.06.1997 | 9–ம் வகுப்பு தேக்கம் |
| 3 | கற்பகம் / முருகேசன் | துப்புரவு பணியாளர் | 10.05.1966 | 20.03.2006 | 8–ம் வகுப்பு தேர்ச்சி |
| 4 | சங்கர் த/பெ வரதராஜன் | துப்புரவு பணியாளர் | 01.06.1967 | 20.03.2006 | 10–ம் வகுப்பு தேக்கம் |
| 5 | B.சுப்பிரமணி த/பெ பலராமன் | துப்புரவு பணியாளர் | 07.02.1968 | 20.03.2006 | 10–ம் வகுப்பு தேக்கம் |
| 6 | சம்பத் த/பெ சந்திரன் | துப்புரவு பணியாளர் | 01.02.1969 | 20.03.2006 | 8–ம் வகுப்பு தேர்ச்சி |
| 7 | S.C கலைச்செல்வன் | துப்புரவு பணியாளர் | 03.05.1970 | 20.03.2006 | 10–ம் வகுப்பு தேக்கம் |
| 8 | R.கணேஷ் | துப்புரவு பணியாளர் | 15.05.1978 | 26.12.2007 | 10–ம் வகுப்பு தேக்கம் |
| 9 | ஜான் வெஸ்லின் | துப்புரவு பணியாளர் | 25.07.1973 | 17.06.2008 | 10–ம் வகுப்பு தேக்கம் |
| 10 | K.சந்தான கிருஷ்ணன் | துப்புரவு பணியாளர் | 28.03.1973 | 20.06.2008 | B.A (இளங்கலை பட்டம்) |

அ.கு–

1920 நகராட்சிகள் சட்டம் பிரிவு 8(a) (1)—ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையரிடம் இருந்து உரிய உத்தரவு வரும் வரை தற்போது பெற்று வரும் ஊதிய விகிதத்திலேயே தற்காலிகமாக மேற்படி முதுநிலைப் பட்டியிலில் உள்ள முதல் மூன்று பணியாளர்களை துப்புரவு மேற்பார்வையாளராக பணியில் அமர்த்த மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1027/2019/எச்2)

**தீர்மான எண். 866 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.6**

செங்கல்பட்டு நகராட்சிக்குப்பட்ட வார்டு எண்.1 JCK நகர், தாழம்பூ தெரு பகுதியில் பழுதடைந்த சாலையை சீரமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் மன்றப் பொருள் அனுமதிக்கும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு—

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 867 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.7**

செங்கல்பட்டு நகராட்சிக்குப்பட்ட வார்டு எண்.30 அனுமந்தபுந்தேரி பிள்ளையார் கோயில் தெரு பகுதியில் புதியதாக சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் மன்ற பொருள் அனுமதிக்கும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு—

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 868 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.8**

செங்கல்பட்டு நகராட்சிக்குப்பட்ட அளகேசன் நகர் பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.2.80 இலட்சம் மன்ற பொருள் அனுமதிக்கும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 869 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.9**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 பெரிய நத்தம் மலைத் தெரு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.70 இலட்சம் மன்ற பொருள் அனுமதிக்கும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 870 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.10**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குப்பட்ட அழகேசன் நகர், EB Office தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சாலை அமைக்கும் பணிக்கும், சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.9.85 இலட்சம் மன்றப் பொருள் அனுமதிக்கும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 871 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.11**

இந்நகராட்சிக்குட்பட்ட பெரியமணியகார தெரு, குடிநீர் பகிர்மான குழாயில் உள்ள 250 MM வால்வு, மற்றும் பாசித் தெருவில் உள்ள நீர்தேக்க தொட்டிலிருந்து செல்லும் குடிநீர் பகிர்மானம் குழாயில் காஞ்சிபுரம் ஐரோடில் JSP மருத்துவமனை எதிரில் உள்ள வால்வு (ம) ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.  இரண்டு வால்வுகள் புதியதாக பொருத்த தோராய செலவு ரூ.75,000/–க்கு மன்றப் பொருள் (ந.க.எண்.872/30.09.2019)

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 872 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.12**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 அண்ணா நகர் பகுதி பிரதான சாலையின் இறுதியில் எல்லையம்மன் கோயில் அருகில் மேலமையூர் ஏரியின் உபரிநீர் வெளியேறும் சிதலமடைந்த சிறுபாலத்தை புதியதாக அமைக்க மதிப்பீடு ரூ.3.40 இலட்சம் ஆகும். மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 873 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.13**

செங்கல்பட்டு நகராட்சியில் வடகிழக்கு பருவமழையின் போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு Dewatering pump, flood light, Torch light, Pick arue, Spade, Share, Power law, Sand bags மற்றும் Geneet – 2 எண்ணிக்கை (Hirl balis) வாங்குவதற்கு மதிப்பீடு ரூ.2.30 இலட்சம் ஆகும். மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 874 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.14**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாரராக உள்ள Jwala equipment Madurai என்பவர் பழவேலி சுடுகாட்டில் எரிவாயுவால் இயக்கும் தகனமேடை அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளியில்

கலந்துக்கொண்டு பணி உத்தரவு கிடைக்காத காரணத்தால் ரூ.4,91,535 தொகை திரும்ப வழங்க கோரியுள்ளார். MSE Facititation Conncil செயல்முறை உத்தரவு நாள்.27.11.2018–ன் மேற்படி நிறுவனத்திற்கு 2.50 லட்சம் வழங்கவும் மற்றும் அந்நிறுவனம் மீது 2013–14 ம் ஆண்டு AG தணிக்கை தடை உள்ளதால், ரூ.2.25 லட்சம் பிடித்தம் செய்யப்பட வேண்டும் என தணிக்கை பத்தியில் குறிப்பிட்டுள்ளதால் மீதி ரூ.2.50 இலட்சம், மேலும் நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி முன்வைப்பு தொகையினை ரூ.2.50/– லட்சம் மட்டும் திரும்ப வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது

அ.கு–

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண். 875 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.15**

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதார பணி மேலாண்மையினை கருதி இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் வீடுகள் தோரும் குப்பைகளை தரம் பிரித்து பெறுவதற்கு 5 Tata ace வாகனங்கள் பயன்படுத்தப்பட்டது. இந்நிலையில் ஐந்து வாகனங்களை பயன்படுத்த நாள் ஒன்றுக்கு ரூ.10000/– வீதம் இரண்டு மாதங்களுக்கு ரூ.6,00,000/– இலட்சத்திற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2219/2018/எச்1)

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. நகரின் பொது சுகாதார அவசியம் கருதி பணிகள் தனி அலுவலரின் முன் அனுமதி (02.01.2019) பெற்று செய்யப்பட்டடதால் தொகை வழங்க அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 876 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.16**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதார மேலாண்மையினை கருதி டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்க தினசரி 50.DBC பணியாளர்கள் மூலம் கொசு மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. மேலும் பொது மக்களிடம் இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த 52 Weak colum கொண்ட Stricker ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்த மொத்தம் 16,000 ஸ்டிக்கர்கள் தேவைப்படுகிறது. இதில் 5000 ஸ்டிக்கர்கள் தன்னார்தொண்டு மூலம் அச்சடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 10000 ஸ்டிக்கர்களை நகராட்சியின் மூலம் அச்சடிக்கவும் வேண்டி

அதற்கான தோராய செலவினம் 1.00 இலட்சத்திற்கும் மற்றும் மாணவ மாணவிகளை கொண்டு பள்ளிகளில் டெங்கு கொசு புழு ஒழிக்கவும் தூய்மை காத்திடவும் இதனை வீடுகளிலும் கடைபிடிக்க இந்த தொகுப்பினை பொது மக்களிடம் தூய்மை தூதுவராகவும் மாணவர்களை பயன்படுத்த அதற்கான ஸ்டிக்கர் அச்சடிக்க ரூ.10,000/– செலவினத்திற்கும் ஆக ரூ.1.00 இலட்சம் + 10000 = 1.10 இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. அவசர அவசியத்தின் நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடைபெறுவதை அங்கரிக்கலாம்.

**தீர்மான எண். 877 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.17**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் (ம) பழவேலி தலைமை நீரேற்றம் நிலையத்தியிருந்து வரும் குடிநீர் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் திரவகுளோரின் மின்மோட்டர்கள் மூலமாக Pumping செய்யப்படுகிறது. நீரேற்றும் நிலையகள் Pumping செய்யப்படும் திரவட்குளோரின் அளவு குறைவாக உள்ளதால் திரவகுளோரின் மோட்டர்கள் காயில் பழுது சரிசெய்ய 3 எண்ணிக்கை மோட்டார்கள், பம்பு ஆகிய பழுதுளை சரிசெய்ய வேண்டி 5 எண்ணிக்கை ஆகிய 8 எண்ணம் மோட்டார் பம்பு சரிசெய்யவதற்கான உத்தேச செலவனம் ரூ.1.20/– இலட்சத்திற்கு மன்றத்தின் பொருள் வைக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இப்பணிக்கான செலவினை குடிநீர் (ம) பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

3. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவரின் முன் அனுமதி பெற்ற மழைநீர் சேகரிப்பு பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 878 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.18**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் புதியதாக மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை அமைக்கவும். ஏற்கனவே உள்ள பழைய மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை புதுபிக்கவும் மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் ஆகும்.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று மழைநீர் சேகரிப்பு பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 879 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.19**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடங்களில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையை கருத்தில் கொண்டு மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் அமைக்க நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களிலும், Defunct Borewell-ஐ recharge pits ஆக மாற்றுவதற்கும் மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றப் பொருள் வைக்கவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று மழைநீர் சேகரிப்பு பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 880 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.20**

செங்கல்பட்டு நகராட்சி ஏற்கனவே ODF (Open defacetion free) திறந்தவெளி கழிப்பிடமில்லா நகராட்சி என சான்றளிக்கப்பட்டுள்ளது. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இவ்வாறு சான்றளிக்கப்பட்டுள்ள நிலையில் ODF+க்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அதன் மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு உறுதி மொழிகளை பள்ளிகளில் இருந்தும், வார்டுகளிலிருந்தும். RWA குடியிருப்புகள் அசோசியேஷனில் இருந்து பெற வேண்டும். மேலும் நாளிதழில் பிரசுரம்

செய்து பின் மாநிலத்திற்கு பிரேரணை அனுப்ப வேண்டும் எனவே இதற்கான பணிகளை மேற்கொள்ள (ரூ.1 இலட்சம்) செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 881 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.21**

செங்கல்பட்டு நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சமூக நல சுத்திரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு 20.08.2018 அன்று Expression of Interest கோரப்பட்டு M/S Water life India PVT Ltd நிறுவனத்திற்கு கீழ்காணும் இடங்களுக்கு சமூகநல சுத்திகரிப்பு நிலையம் அமைக்க பணி உத்தரவு வழங்கப்பட்டடது. 25.10.2018 அன்று பணி உத்தரவு வழங்கியது முதல் தற்போது வரை பணி தொடங்கப்படாமல் இருப்பதால் பணியினை ரத்து செய்து அந்த இடங்களுக்கு மீண்டும் Expression of Enterest கோருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. சமூக நல சுத்திகரிப்பு மையம் அமைக்க இருக்கும் இடங்கள்

1. வார்டு எண்.2 – பழைய பேருந்து நிலையம்
2. வார்டு எண்.4 – பாசித் தெரு நீர்தேக்க தொட்டி
3. வார்டு எண்.9,10 – தட்டான்மலை
4. வார்டு எண்.12 – ரேடியோமலை
5. வார்டு எண்.33 – திருக்கழுக்குன்றம் ரோடு (JP) Jn

மேற்காணும்ட இடங்களில் மறு Expression of Interest கோர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 882 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.22**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது மழை காலத்தை முன்னிட்டு பல வித முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டி இருப்பதாலும் குறிப்பாக டெங்கு, மலேரியா போன்ற கொடிய நோய்களிலிருந்து பொது மக்களை காப்பாற்ற வேண்டி இருப்பாலும் அதற்கு அத்தியவசியமாக தேவைப்படும் புகை மருந்து அடிக்கும் இயந்திரம் வாங்கி காய்ச்சல்

கண்டுள்ள வீடுகளின் உள்ளே மருந்து தெளிக்கவும் 2 கைபிடி புகை அடிக்கும் சிறிய மிஷின் மற்றும் 20 கேஸ் சிலிண்டர் ஆகியவற்றினை பதிவு பெற்ற நிறுவனத்திடமிருந்து வாங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.80 ஆயிரத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. அவசர அவசியத்தின் நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கிகரிக்கலாம்.

**தீர்மான எண். 883 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.23**

செங்கல்பட்டு நகராட்சியில் தசரா திருவிழா நடைபெறும் இந்த வருடம் 29.10.2019 முதல் 08.10.2019 வரை நடைபெற தசரா திருவிழாவிற்கு நவின கழிப்பிட வசதி அமைக்கு 10 நாட்களுக்கு 4 எண்ணிக்கை கொண்ட Protuble mobile Toilet அமைக்க தோராய மதிப்பீடு 1.30 இலட்சத்திற்கு மன்ற பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. தசரா பணியின் அவசியம் கருதி மன்றதின் அனுமதியை எதிர்நோக்கி / தனி அலுவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 884 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.24**

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19 ஆம் ஆண்டு நிதியாண்டில் பின்வரும் மாநில பேரிடர் நிதியின் கீழ் பணிகளுக்கு 31.05.2019 அன்று நடைபெற்ற நகரமன்ற கூட்டத்தில் நிர்வாக அனுமதி திர்மான 796–ஐ கிடைக்கப்பட்டதை தொடர்ந்து <u>12.07.2019</u> அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கிழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரபெற்றுள்ளதை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | திட்ட மதிப்பீட்டுக்கு |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24, தண்டுக்கரை பகுதியில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறுமின் விசை பம்பு மற்றும் அதற்கான பைப்லைன், மோட்டார் வசதி செய்யும் பணி. | ரூ.3.30 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.43% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.51% அதிகம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30, குறிஞ்சி நகர் பகுதியில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய மின் விசை பம்பு மற்றும் அதற்கான பைப்லைன், மோட்டார் வசதி செய்யும் பணி. | ரூ.3.30 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.43% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.51% அதிகம் |
| 3 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பழவேலி தலைமை நீரேற்ற நிலையம் பகுதியில் நீர் ஆதார கிணற்றில் புதியதாக மோட்டார் வசதி மற்றும் அதற்கான பைப்லைன், கேபிள் அமக்கும் பணி | ரூ.10.60 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.08% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 0.25% அதிகம் |
| 4 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11, வேதப்பர் தெருவில் சிறுமின் விசை பம்புடன் கூடிய Sintex tank மற்றும் கிணறு தூர் வாரும் பணி மேற்கொள்ளுதல். | ரூ.1.55 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.44% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.02% அதிகம் |
| 5 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, காத்தான் தெருவில் சிறுமின் விசை பம்புடன் கூடிய Sintex tank மற்றும் கிணறு தூர் வாரும் பணி மேற்கொள்ளுதல். | ரூ.1.55 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.44% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.02% அதிகம் |
| 6 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4, பாசித் தெருவில் சிறுமின் விசை பம்புடன் கூடிய Sintex tank மற்றும் கிணறு தூர் வாரும் பணி மேற்கொள்ளுதல். | ரூ.1.55 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.44% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.02% அதிகம் |
| 7 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2, தேவராஜனார் பூங்கா சிறுமின் விசை பம்புடன் கூடிய Sintex tank மற்றும் கிணறு தூர் வாரும் பணி மேற்கொள்ளுதல். | ரூ.1.55 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.44% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.02% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19, என்.எஸ்.கே தெருவில் சிறுமின் விசை பம்புடன் கூடிய Sintex tank மற்றும் கிணறு தூர் வாரும் பணி மேற்கொள்ளுதல். | ரூ.1.55 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.44% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.02% அதிகம் |
| 9 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25, மேலமைய்யூர் பிள்ளையார் கோவில் தெருவில் சிறுமின் விசை பம்புடன் கூடிய Sintex tank மற்றும் கிணறு தூர் வாரும் பணி மேற்கொள்ளுதல். | ரூ.1.55 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.44% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.02% அதிகம் |

அ.கு–

மேற்காணும் பத்து பணிகளுக்கும் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம். அதிக ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளிகளின் டெபாசிட் தொகையினை திரும்ப வழங்கலாம்.

**தீர்மான எண். 885 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.25**

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19 ஆம் ஆண்டு நிதியாண்டில் பின்வரும் மாநில பேரிடர் நிதியின் கீழ் பணிகளுக்கு 31.05.2019 அன்று நடைபெற்ற நகரமன்ற கூட்டத்தில் நிர்வாக அனுமதி திர்மான எண் 796 கிடைக்கப்பட்டதை தொடர்ந்து <u>12.07.2019</u> அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கிழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரபெற்றுள்ளதை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | திட்ட மதிப்பீட்டுக்கு |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.07, லிட்டில் ஜாக்கி பள்ளி அருகில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறுமின் விசை பம்பு மற்றும் அதற்கான பைப்லைன், மோட்டார் வசதி செய்யும் பணி. | ரூ.3.30 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.43% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.53% அதிகம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01, பாரதி நகர் பகுதியில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய | ரூ.3.30 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.43% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | சிறுமின் விசை பம்பு மற்றும் அதற்கான பைப்லைன், மோட்டார் வசதி செய்யும் பணி. | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.51% அதிகம் |
| 3 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, தட்டான்மலை பகுதியில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறுமின் விசை பம்பு மற்றும் அதற்கான பைப்லைன், மோட்டார் வசதி செய்யும் பணி. | ரூ.3.30 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.43% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.5% அதிகம் |
| 4 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12, ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறுமின் விசை பம்பு மற்றும் அதற்கான பைப்லைன், மோட்டார் வசதி செய்யும் பணி. | ரூ.3.30 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.43% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.51% அதிகம் |
| 5 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.29, புதுஏரி பகுதியில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறுமின் விசை பம்பு மற்றும் அதற்கான பைப்லைன், மோட்டார் வசதி செய்யும் பணி. | ரூ.3.30 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.43% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.51% அதிகம் |
| 6 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27, ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறுமின் விசை பம்பு மற்றும் அதற்கான பைப்லைன், மோட்டார் வசதி செய்யும் பணி. | ரூ.3.30 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.43% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.51% அதிகம் |
| 7 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21, ராமபாளையம் பகுதியில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறுமின் விசை பம்பு மற்றும் அதற்கான பைப்லைன், மோட்டார் வசதி செய்யும் பணி. | ரூ.3.30 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.43% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 1.51% அதிகம் |

அ.கு–

மேற்காணும் ஏழு பணிகளுக்கும் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம். அதிக ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளிகளின் டெபாசிட் தொகையினை திரும்ப வழங்கலாம்.

**தீர்மான எண். 886 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.26**

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19 ஆம் ஆண்டு நிதியாண்டில் பின்வரும் குடிநீர் நிதியின் கீழ் பணிகளுக்கு 31.05.2019 அன்று நடைபெற்ற நகரமன்ற கூட்டத்தில் நிர்வாக அனுமதி கிடைக்கப்பட்டதை தொடர்ந்து 12.07.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரபெற்றுள்ளதை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | திட்ட மதிப்பீட்டுக்கு |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட ராமபாளையம் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி. | ரூ.1.30 | திரு.K.ராஜகோபாலன் | 0.05% குறைவு |
| | | | திரு.அப்பலோ என்டர்பிரைஸல் | 0.56% அதிகம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட V.P.சிங் நகர் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி. | ரூ.1.00 | திரு.N.கங்காதரன் | 0.02% குறைவு |
| | | | திரு.விமலாபாய் கன்ஸ்ரக்ஸனஸ் | 1.27% அதிகம் |
| 3 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறுமின் விசைபம்பு வால்வுகள் பழுது மற்றும் பராமரிப்பு பணி. | ரூ.6.00 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.15% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 0.92% அதிகம் |
| 4 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய் உடைப்பு மற்றும் கசிவு சரி செய்யும் பணி. | ரூ.9.00 | அப்லோ என்டர்பிரைஸல் | 0.03% குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸல் | 0.15% அதிகம் |
| 5 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பெரியமணியகாரர் தெரு நீர் தேக்க தொட்டியில் பைப்லைன் Interlink பணி. | ரூ.1.50 | திரு.சி.வீரபாண்டியன் | 0.04% குறைவு |
| | | | திரு.N.கங்காதரன் | 1.60% அதிகம் |
| 6 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட கைலாசநாதர் கோவில் லிட்டில் ஜாக்கி பள்ளி அருகில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி. | ரூ.1.80 | திரு.சி.வீரபாண்டியன் | 0.02% குறைவு |
| | | | திரு.N.கங்காதரன் | 0.11% அதிகம் |

அ.கு–

மேற்காணும் ஆறு பணிகளுக்கும் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம். அதிக ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளிகளின் டெபாசிட் தொகையினை திரும்ப வழங்கலாம்.

**தீர்மான எண். 887 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.27**

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19 ஆம் ஆண்டு நிதியாண்டில் பின்வரும் பொது நிதியின் கீழ் பணிகளுக்கு 31.05.2019 அன்று நடைபெற்ற நகரமன்ற கூட்டத்தில் நிர்வாக கிடைக்கப்பட்டதை தொடர்ந்து 12.07.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரபெற்றுள்ளதை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | திட்ட மதிப்பீட்டுக்கு |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் பாராளுமன்ற தேர்தலுக்கான அனைத்து அடிப்படை வசதிகள் (குடிநீர் வசதி, மின் வசதி, கழிப்பிட வசதி, 3 Amps pin, ரேம்ப், சாமியானா) அமைக்கும் பணி. | ரூ.4.30 | திரு.சி.வீரபாண்டியன் | 0.04% குறைவு |
| | | | திரு.N.கங்காதரன் | 1.72% அதிகம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட அனுமந்தபுத்தேரி மற்றும் அறிஞர் அண்ணா மேல்நிலை பள்ளிகளில் பாராளுமன்ற தேர்தலுக்கான Model Booth மற்றும் Pink Booth அமைக்கும் பணி. | ரூ.1.50 | திரு.சி.வீரபாண்டியன் | 0.04% குறைவு |
| | | | திரு.N.கங்காதரன் | 5.96% அதிகம் |

அ.கு–

மேற்காணும் இரண்டு பணிகளுக்கும் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம். அதிக ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளிகளின் டெபாசிட் தொகையினை திரும்ப வழங்கலாம்.

**தீர்மான எண். 888 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.28**

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19 ஆம் ஆண்டு நிதியாண்டில் பின்வரும் பொது நிதியின் கீழ் பணிகளுக்கு 31.05.2019 அன்று நடைபெற்ற நகரமன்ற கூட்டத்தில் நிர்வாக அனுமதி கிடைக்கப்பட்டதை தொடர்ந்து <u>12.07.2019</u> அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரபெற்றுள்ளதை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | திட்ட மதிப்பீட்டுக்கு |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வடமலை பள்ளி அருகில் உள்ள சமுதாய கழிப்பிடம் பழுது மற்றும் பராமரிப்பு பணி. | ரூ.2.40 | திரு.சி.வீரபாண்டியன் | 0.03% குறைவு |
| | | | திரு.N.கங்காதரன் | 1.75% அதிகம் |

அ.கு–

மேற்காணும் ஒரு பணிகளுக்கும் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம். அதிக ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளிகளின் டெபாசிட் தொகையினை திரும்ப வழங்கலாம்.

**தீர்மான எண். 889 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.29**

இந்நகராட்சியில் பல்வேறு பிரிவுகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சீருடைகள், காலணிகள் மற்றும் தையற் கூலி ஆகியவை இந்த ஆண்டிற்கு (2019–2020) சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் துப்புரவு மேற்பார்வையாளர்கள், மகபேறு உதவியாளர்கள் பொறியாளர் பிரிவு பணியாளர்கள், ஒட்டுநர்கள் அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கு தோராயமாக 140 பணியாளர்களுக்கு வாங்கி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்டவைகளுக்கு தோராய செலவினமாக ரூ.5 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 890 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்.30

செயலாளர் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை–600 106 அவர்களின் கடிதம் ந.க.எண்.3193/2019/EG2, நாள்.16.09.2019 உள்ளாட்சி சாதாரண தேர்தல் நடைபெற இருப்பதை முன்னிட்டு தேர்தலுக்கான Control units மற்றும் Ballot units- கர்நாடகா மாநிலத்தில் இருந்து காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜபாத் பஞ்சாயத்து யூனியன் EVM சேமிப்பு கிடங்கிற்கு கொண்டு வந்து சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.11119/2019/PC2 நாள்.14.09.2019–ன் படி உத்திரவிட்டதின் பேரில், கர்நாடக மாநிலத்தில் தங்கி, அங்கு இருந்து காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜபாத் பஞ்சாயத்து யூனியன் சேமிப்பு கிடங்கிற்கு கொண்டு வந்து சேர்த்தற்குண்டான கட்டணம் பில் ரூ.135360/– நகராட்சி ஆணையரால் செலவு மேற்கொள்ளப்பட்டது அதன் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/S Dolphin Travels, Chengalpattu<br>செங்கல்பட்டு to பெங்களூர் 24.09.2019 முதல் 27.09.2019 வரை<br>நான்கு நாட்களுக்கான வண்டி (கார்) கட்டணம் | ரூ.19320/– |
| 2. | M/S சந்திரா டிராண்ட்ஸ்போர்ட் & கம்பெனி<br>பெங்களூரில் EVM Machine Ballot Box 426 எண்ணிக்கை<br>ஏற்றுக் கூலி கட்டணம் | ரூ.29820/– |
| 3. | M/S சந்திரா டிராண்ட்ஸ்போர்ட் & கம்பெனி<br>வாலாஜபாத்தில் இறக்கு கூலி கட்டணம்<br>(டவுன் பஞ்சாயத்து அலுவலகம்) | .29820/– |
| 4. | M/S ராயல் ரோட்லைன்ஸ் பெங்களூர்,<br>பெங்களூரில் இருந்து காஞ்சிபுரம் வரை EVM Machines<br>Ballot Units கொண்டு வந்ததற்கான டிராண்ட்ஸ்போர்ட்<br>கட்டணம் | ரூ.29400/– |
| 5. | M/S Hotel Fiesta Grand பெங்களூர்<br>24.09.2019 முதல் 26.09.2019 வரை<br>ஹோட்டலில் தங்கியதற்கான அறை வாடகை கட்டணம் | ரூ.27000/– |
| | மொத்தம் | 135360/– |

மேற்படி தொகை ரூ.1,35,360/– ஐ நகராட்சி ஆணையருக்கு வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.கு–

தேர்தல் சம்பந்தமாக அவசர அவசியம் கொண்டு மேற்படி தொகை செலவழிக்கப்பட்டதால் மன்ற முன் அனுமதி எதிர் நோக்கி வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.3327/2019/சி1)

**தீர்மான எண். 891 நாள் 30.09.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தனி அலுவலர்/ ஆணையர்**
**செங்கல்பட்டு நகராட்சி**